1976

உ

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# பரிசுத்தினம்

1976-9-28

பிரதம விருந்தினர்:

கலாநிதி க. கைலாசபதி

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத் தலைவர்

# நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| தேவாரம் | செல்வன் இ. சுதாகரன்<br>செல்வன் மா. யோகேஸ்வரன் |
| வரவேற்புரை | செல்வன் மு. ஸ்ரீகாந்தன் |
| அறிக்கை | அதிபர் |
| பரிசு வழங்கல் | திருமதி. சர்வமங்களம் கைலாசபதி |
| லய விந்நியாசம் | கல்லூரி மாணவர்கள் |
| பரிசுத்தின உரை | கலாநிதி க. கைலாசபதி அவர்கள் |
| நன்றியுரை | திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்<br>(செயலாளர், பழையமாணவர் சங்கம்)<br><br>செல்வன் க. ஹரிச்சந்திரா<br>(சிரேஷ்ட மாணவ முதல்வர்) |
| சிவ தாண்டவம் | செல்வன் க. இராதாகிருஷ்ணன் |
| கல்லூரிக்கீதம் | |

உ

சிவமயம்

# அதிபரின் அறிக்கை 1976

எமது மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய பிரதம விருந்தினர்
கலாநிதி கைலாசபதி அவர்களே,
திருமதி கைலாசபதி அவர்களே,
சகோதர சகோதரிகளே,
பெற்றோர்களே, பழைய மாணவர்களே!

எமது வருடாந்தப் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்துள்ள உங்களனைவரையும் வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கல்லூரியின் வளர்ச்சியில் நீங்கள் காட்டி வரும் ஆதரவு எம்மை ஊக்குவிப்பதுடன் கல்லூரி மேன்மேலும் பல சாதனைகளை நிலை நாட்டி நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் சிறந்த தொண்டினை ஆற்றிவர உதவுகின்றது. ஆக்கபூர்வமான தங்கள் ஆதரவு எம் பணியைச் சிறப்புறச் செய்யும் என்பதில் ஐயமில்லை. எமது பணி வளம் பெற்றுச் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்,

கலாநிதி கைலாசபதி அவர்களே,

பல துறைகளிலும் வித்தகர்களாகி பல வழிகளிலும் தம்மை ஈடுபடுத்தி, பொது வாழ்வினைச் சிறப்படையச் செய்து வரும் ஆயிரக் கணக்கான எங்கள் கல்லூரியின் பழைய மாணவர்களின் வரிசையிலே முன்னணியிற் திகழ்பவரும் மதிக்கப்படுபவருமாகிய தங்களை நினைந்து எமது கல்லூரி என்றும் பெருமைப்பட்டு வந்துள்ளது. மலேசிய நாட்டிலிருந்து வந்து எமது கல்லூரியிற் பயின்று பின்னர் றோயல் கல்லூரி சென்று பல்கலைக்கழகம் புகுந்த நீங்கள் நம் தாய் மொழியாம் தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாகக் கற்று, சிறப்புப் பட்டம் பெற்று. இலங்கையின் நாளேடான "தினகரனின்" ஆசிரியராய் அமர்ந்தபின், இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை ஆராய்ச்சியில் ஈடுபட்டு எம். ஏ., கலாநிதிப் பட்டங்களையும் பெற்று, ஆண்டாண்டு தோறும் பல்கலைக் கழகம் புகும் தமிழ்த் துறை மாணவர்களுக்கு நல்லாசானாய் வீற்று தமிழ்த் தொண்டு செய்து வருவதை நாடும் நாமும் நன்கறிவோம்,

தங்கள் கல்வித்துறைச் சேவை பல்கலைக் கழகத்தோடு நின்று விட்டதொன்றல்ல. இறவாத புகழுடைய தமிழ் நூல்கள் பல ஆக்கியும், ஆய்வுகள் பல புரிந்தும் தமிழ்த் தாய்க்குத் தாங்கள் புனைந்த காலத்தாலழியாத ஆபரணங்கள் பலப்பல. அவற்றுள்ளும் ஒப்பியலிலக்கியம் (*Comparative Literature*), இரு மகாகவிகள்,

பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் (*Tamil Heroic Poetry*) போன்றவை, தமிழ் அறிஞர் உள்ளங் கவர்ந்தவை. தங்கள் படைப்புகளைச் சுவைக்கும்போது கணக்காயரும் கதாசிரியரும் யாழ்ப்பாணக் கலைக்கோயில்களிலொன்றான வைத்தீஸ்வர வித்தியாலயத்தை உருவாக்கியவர்களில் ஒருவருமாகிய தங்கள் பேரனார் பெரியார் நாகமுத்து உபாத்தியாயரின் செல்வாக்கை உணர முடிகிறது என்று அறிகிறோம்.

தங்களின் தமிழ்த் தொண்டினைக் கண்டு நாம் பெருமைப்படுகின்றதில் அதிசயமில்லை. தங்கள் தொண்டின், சேவையின் திறமையினைக் கௌரவிக்கும் முகமாக பல்கலைக் கழக நிர்வாகம் தங்களை யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறைப் பேராசிரியராய் நியமித்ததோடு யாழ் வளாகத்தின் முதல் தலைவராகவும் நியமித்துள்ளது. யாழ் வளாகத்தின் முதல் தலைவரை, தமிழ்ப் பேராசிரியரை உருவாக்கியதில் பெரும்பங்கு கொண்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பெருமைப்படுவதோடு, மேலும் பல சிறப்புகளைத் தாங்களீட்ட எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக என்று வாழ்த்துகின்றது.

திருமதி கைலாசபதி அவர்களே!

எங்கள் பழைய மாணவன், யாழ் வளாகத் தலைவன், பேராசிரியன் என்ற பெருமைக்கெல்லாம் கலாநிதி கைலாசபதி இலக்கானார் என்றால் அதில் தங்கள் பங்கு அளவிடற்கரியது என்பதை நாம் அறிவோம். தங்களைக் கரம்பற்ற விளைந்த ஆசைதான் இவரைக் களைக்காது உழைக்க வைத்ததென்று நம்புகின்றோம். தங்கள் தந்தையார் கணித மேதை மாணிக்க இடைக்காடர் அவர்களின் சாதனைகளும் வெற்றியும் தமிழ் மக்களுக்குத் தெரிந்தவையே. பேராசிரியர் கைலாசபதியின் கலை வாழ்வில், இல்வாழ்வில் அத்துவிதமாகி நாம் பெருமை பெற உழைக்கும் தாங்கள், எங்கள் பாராட்டுக்குரியவர். பரிசில்களை வழங்க இசைந்து வருகை தந்தமைக்கு நன்றி கூறி வரவேற்கின்றோம்.

பெரியோர்களே!

1972-ம் ஆண்டில் சுதந்திரமும் தன்னுரிமையும் கொண்ட குடியரசாக இலங்கை அரசியல் ரீதியில் பெற்ற மாற்றத்தை பிற துறைகளில் பிரதிபலிக்கச் செய்யும் முயற்சிகளில் கல்வித் துறையில் மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அன்று புகுத்தப்பட்ட ஆரம்ப இடைநிலைக் கல்வி மாற்றம் ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்புவரை செயற்படுத்தப்பட்டு சென்ற ஆண்டு இறுதியில் முதன் முதலாக நடைபெற்ற தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையுடன் பூர்த்தியாகியுள்ளது. மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இவ்வாண்டு பங்குனி மாதத்தி



லிருந்து தேசிய உயர் கல்வித் தராதரப் பத்திர வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இம் மாணவர்கள் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியை ஆரம்பித்துள்ளனர்.

ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை புதிய ஆரம்ப இடைநிலைக்கல்வியை நாம் செயற்படுத்தும் காலக்கட்டத்தில் புகுத்தப்பட்ட மாற்றங்களையுணர்ந்து அவற்றிற்கேற்ப ஆசிரியர்களும், கல்வி நிர்வாகிகளும் பலவழிகளிலும் தீவிரமாகத் தொழிற்பட வேண்டிய நிலைக்குள்ளாக்கப்பட்டோம். தத்துவார்த்த ரீதியாகப் பார்க்குமிடத்து கற்கும் துறைகளிலும், கற்றல் கற்பித்தல் முறைகளிலும் கடைப்பிடிக்கப்பட்ட மாற்றங்கள் பொருத்தமானவையாயும், பயன்தரக் கூடியனவாயும் காணப்படுகின்றனவெனினும் நாட்டின் பொருளாதார சமுதாய மாற்றத்திற்கும், முன்னேற்றத்திற்கும் இவை எந்த அளவிலான பயனை ஏற்படுத்துமென்பதை இன்று எடைபோட்டுத் திட்டவட்டமாகக் கூறவியலாது. சிரேஷ்ட இடைநிலைக் கல்வி, பாடசாலைப் பின் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி ஆகியவற்றின் மாற்றங்களையும் முற்றாகச் செயல்படுத்தியதன் பின்னரும் சில ஆண்டுகள் சென்றதன் பின்னரே இவற்றின் முழுமையான பலனையும் நாம் உணரவோ எடைபோடவோ முடியும். க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் சித்தி விகிதாசாரத்திலும் பார்க்க தே. க. பொ. த பரீட்சையில் கூடியவளவு சித்தி விகிதாசாரத்தை மாணவர்கள் பெற்றுள்ளனர். எனவே முன்னிலும் பார்க்க புதிய திட்டத்தில் கூடியவளவு தொகையான மாணவர்கள் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியைப்பெற வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. க. பொ. த. (உயர்தரம்) வகுப்பில் அனுமதி பெற்றவரிலும் பார்க்க தே. க. உயர் தராதரப்பத்திர பரீட்சை வகுப்பு H. N. C. E. இல் கூடுதலான மாணவர்கள் இவ்வாண்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன் பெறுபேறாக ஆரம்ப இடைநிலைக்கல்வியுடன் பாடசாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்களின் தொகையும் குறைவதற்கும் வழிவகுக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் புதிய சிரேஷ்ட உயர்நிலைக் கல்வியின் முதல் வருட வகுப்பாகிய H. N. C. E கல்வி உலகின் முழுக்கவனத்தையும் ஈர்த்துள்ளதைக் கண்டு வியப்படைய வேண்டியதில்லை. G. C. E. (A/L) வகுப்பிற்குப் பதிலாக H N C. E. புகுத்தப்பட்டுள்ளது. எத்திட்டம் சிறந்தது என்ற வினாக்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. G. C E. (A/L) திட்டத்தில் மாணவர்களுக்கு பரந்துபட்டதாயில்லாமல் பொதுத்தொடர்பற்ற அறிவு விருத்தி அளிக்கும் நிலையினைச் சுட்டிக்காட்டி பௌதிக விஞ்ஞான மாணவன் மொழியறிவை விருத்தி செய்யாது தனது முதாதையரால் விட்டுச்செல்லப்பட்ட பாரம்பரிய மரபுவழிக் கலாச்சாரம் பண்பாடு ஆகிய

வற்றை அறிய முடியாத வகையில் திட்டம் அமைக்கப்பட்டிருந்த குறையை புதியதிட்டத்தில் முதல்மொழி, இரண்டாம் மொழி, மரபுவழிப்பண்பாடு என்ற பாடத்துறைகளைப் புகுத்தியதனால் நீக்கியுள்ளனர். வியாபாரம், உற்பத்தி ஆகியவை பெருகிவரும் நாடுகளில் முகாமையியல், புள்ளிவிபரவியல் பற்றிய அறிவு வளர்ச்சி பெற்றிருந்தாலன்றி அவற்றிலீடுபட்டுள்ள நிறுவனங்களை நன்கு நிர்வகித்துப் பலனடைய முடியாது. முகாமையியல் பிரத்தியேக கலையாக முன்னேற்றமடைந்த நாடுகளில கற்பிக்கப்பட்டு வருவதனால் அங்குள்ள பல்துறை நிறுவனங்களின் முகாமையானது சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பொருளாதார அபிவிருத்தியினை நாடிநிற்கும் நமது நாட்டிலும் முகாமைத்துறை அறிவையும் புள்ளிவிபரவியல் அடிப்படை அறிவையும் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியைப் பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு அளிப்பதன் மூலம் வருங்காலத்தில் தொழில்துறை, உற்பத்தித்துறைகளின் நிர்வாகம் சிறப்படைய வழிவகுக்கப்படும். புதிய திட்டத்தின் பொதுப் பாட அம்சமாகப் புகுத்தப்பட்டுள்ள பாடங்கள், சிரேஷ்ட இடைநிலைக்கல்வியைப் பரந்த அடிப்படையிலானதாக மாற்றியமைத்ததுமல்லாமல், நாட்டின் முன்னேற்றத்தைக் கூடியவளவு கருத்திற்கொண்டதாகவுமுள்ளதனால் G. C. E. (A/L) திட்டத்திலும் பார்க்கப் பயனுடையதென்றும் கூறி வரவேற்கின்றோம்.

H N. C. E. பாடத்திட்டங்கள், பாடவிதானங்கள் பாட வழிகாட்டிகள் புதிதாகத் தயாரிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டதுடன் சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பாடப் புத்தகங்களும் பிரசுரிக்கப்பட்டு உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளன. ஆசிரியர்களும் மாணவர்களும் வாசித்துப் பயன்பெற உசாத்துணை நூல்களின் பட்டியல்களும் வழங்கப்பட்டுள்ளன. உசாத்துணை நூல்களிற்பல வெளிநாட்டுப் பதிப்புகளாகவும் இருப்பதனால், அவற்றைப் பெறுவதில் பல கஷ்டங்களைப் பாடசாலைகள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. புத்தக விற்பனையாளர்களிடமிருந்து இந்நூல்கள் பெறக்கூடியதாக இல்லாததனால் உசாத்துணை நூல்களைப் பயன்படுத்த வியலாதிருக்கின்றது. இந்நிலைமையைப் போக்குவதற்கு பாடநூல் வெளியீட்டு இலாகா உசாத்துணை நூல்களின் தேவைகளையறிந்து அவற்றைக் கூடிய விரைவிற் பெற்றுத்தர ஒழுங்குகள் மேற்கொள்ளுமேயானால், வெளிநாட்டுச் செலவாணி பெறுதல் போன்ற கஷ்டங்களிலிருந்து பாடசாலைகள் விடுபடவும், ஆசிரியர்கள் அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட முன்னேற்றமான, தரமான நூல்களைக் கொண்டு, புதிய பாடத்திட்டத்திலான அறிவை விருத்தி செய்து கற்றல் கற்பித்தல் நிலையினைச் சிறப்பாக அமைத்து



புதிய திட்டத்தினை நல்ல முறையிற் செயற்படுத்த உதவியாயிருக்கும். மாணவர்களின் உபயோகத்திற்கும் தமிழ், சிங்கள மொழிகளில் உசாத்துணை நூல்களைப் பிற மொழிகளிலிருந்து மொழிபெயர்த்துப் பதிப்பதனையும் மேற்கொள்வது அவசியமாகின்றது. இந்நடவடிக்கைகள் அதிவிரைவில் எடுக்கப்படுமேயாகில் இவ்வாண்டு H N C E; மாணவர் நன்மையடைய வாய்ப்பாகும்.

சென்ற ஆண்டு பரிசுத்தின அறிக்கையில் வகுப்பறைகளின் பற்றாமை பற்றியும், தொழில் முன்னிலைப்பாடங்களைத் திருப்தியான முறையில் கற்பிப்பதற்கு தொழிற்கூட வசதிகளை விரிவடையச் செய்தலின் அவசியத்தைப் பற்றியும், விஞ்ஞான கூடங்களை விஸ்தரித்தல் வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தேன். இவை சம்பந்தமாக நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளித்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்;

இப்பணியினை நிறைவேற்ற நல்லூர் தேசியப் பேரவை உறுப்பினரும், யாழ் மாவட்ட அரசியலதிகாரியும் எமது பழைய மாணவர் சங்கத் தலைவருமாகிய திரு. C. அருளம்பலம் அவர்கள் பெருமளவில் உதவி புரிந்துள்ளார்கள். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் எமக்கு ஒருலட்சத்து முப்பத்தாறாயிரம் ரூபாவைப் பெற்றுத் தந்துள்ளார்கள். அத்துடன் பழைய மாணவர் சங்கமும் கோயில் கட்டிட நிதியிலிருந்து ரூபா பதினையாயிரம் கடனாகத் தந்துதவியுள்ளது. இவற்றைக் கொண்டு 180 அடி நீளமும் 60 அடி அகலமுங் கொண்ட மாடிக்கட்டிடமொன்றை நாம் கட்டி வருகின்றோம். கீழ்மாடி வேலைகள் பூர்த்தியாகியுள்ளன. மேல்மாடி வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக்கட்டிடம் பூர்த்தியானதும் எட்டு மேலதிக வகுப்பறைகளும் நான்கு சிறிய அறைகளும் உபயோகத்திற்குக் கிடைக்கும். இக்கட்டிடத்தைக் கட்டி முடிப்பதற்குப் பேருதவி புரிந்த தேசியப் பேரவை உறுப்பினர் C. அருளம்பலம் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, மேலுமவர்களின் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையுமுடையோம்.

தொழிற்கூட வசதிகளை விரிவாக்கும் முயற்சியிலும் நாம் சிறிதளவு முன்னேற்றத்தை இவ்வாண்டு பெற்றுள்ளோம். இவ்வளவு காலமும் எமது மாணவர்கள் மோட்டார் எந்திரவியல் பாடத்தை அருகாமையிலிருந்த இளைஞர் பொருளாதார முன்னேற்ற மன்றத்துக்குச் (Youth Council) சென்று கற்றுவந்தனர். மேற்படி மன்றம் (Youth Council) சென்ற ஆண்டின் பிற்பகுதியில் மூடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவ்வேளையில் மோட்டார் எந்திரவியல் கற்பிப்பதற்குரிய பல ஆயிரம் ரூபாய்கள் பெறுமதியான உபகரணங்கள் அத்தனையையும் இளைஞர் பொருளாதார முன்னேற்ற மன்ற (Youth Council) முகாமைச் சபையினர்

எமக்குக்கையளித்துள்ளனர், இவற்றை நாம் பெறுவதற்கு எமது முது பெரும் பழைய மாணவரும் இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளருமான திரு. எஸ். யு. சோமசேகரம் அவர்கள் பேருதவி புரிந்துள்ளார். அவருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் அவர்களும், கல்வி அதிகாரி திரு. இ.வி இராமநாதன் அவர்களின் சிபார்சினைக் கொண்டு இவ்வுபகரணங்களை நாம் பெறுவதற்கு அரசாங்க நிதியை உதவியுள்ளார். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வுபகரணங்களைக் கொண்டு மோட்டார் எந்திரவியல் பாடத்தைக் கற்பிப்பதற்கு வேண்டிய தொழிற்கூடத்தை பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியிலிருந்தும், வசதிக்கட்டண நிதியிலிருந்தும் பணத்தைப் பெற்று ஆக்கியுள்ளோம். இன்று யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கக் கூடிய தொழிற்கூடமாக எமது தொழிற்கூடம் அமைந்துள்ளது.

இவ்வாண்டு ஆரம்பத்தில் 6-ம் வகுப்பில் உலோக வேலையையும், விவசாயத்தையும் மேலதிக தொழில் முன்னிலைப் பாடங்களாகப் புகுத்தியுள்ளோம். இப்பொழுது எமது கல்லூரியில் எல்லாமாக ஆறு தொழில் முன்னிலைப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. உலோக வேலையைக் கற்பிப்பதற்குத் தொழிற்கூடமொன்றைத் தற்காலிகமாக அமைத்துள்ளோம். விவசாய உபகரண அறையொன்றும் ஒதுக்கப்பட்டுள்ளது. செய்முறைத் தேவையைக் கருதி பாடசாலை வளவில் ½ ஏக்கர் நிலப்பரப்பையும் ஒதுக்கி வேலியிட்டு செய்முறையை ஊக்கப்படுத்தியுள்ளோம். விவசாயத்திற்கு வேண்டிய பல உபகரணங்களையும் வித்தியாபகுதி எமக்குத் தந்துதவியுள்ளது.

புதிய H.N.C.E. வகுப்புகளை ஆரம்பித்த காலத்திலிருந்து விஞ்ஞான ஆய்வுகூட வசதியையும் விஸ்தரிக்க வேண்டிய நிலைக்குள்ளாக்கப்பட்டோம். பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியிலிருந்து பெறப்பட்ட பணத்தைக் கொண்டும் பழைய கட்டடத்திலிருந்து பெற்ற மரம், நிலை, கதவு, ஜன்னல் அஸ்பஸ்ரோஸ் தகடு முதலியவற்றையும் கொண்டு 62 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட ஆய்வுகூடமொன்றையும் இப்பொழுது கட்டி வருகின்றோம். இன்னும் ஒரு மாத காலத்தில் இவ்வேலையும் பூர்த்தியாகவுள்ளது.

பாடசாலை வளவைச் சுற்றியுள்ள வேலிகளை வருடாவருடம் அடைப்பிப்பதனால் பெருமளவு பணம் வசதிக் கட்டண நிதியிலிருந்து செலவாகி வந்துள்ளது. இதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் 100 அடி நீளமுள்ள சுவரொன்றையும் பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியிலிருந்து கட்டி முடித்துள்ளோம்.



எமது கல்லூரி வளவிலுள்ள மின்விநியோக (Supply line) ஒழுங்கு சீரற்று இருந்தது அவற்றைத் திருத்தியமைத்தற்கு இலங்கை மின் விநியோக சபையாருடன் நாம் எடுத்துக் கொண்ட முயற்சியால் ஒரு பகுதி வேலை பூர்த்தியாகியுள்ளது. இப்பணியை நிறைவேற்ற எமக்குப் பேருதவி புரிந்த எமது பழைய மாணவரும், யாழ் மாவட்ட மின்பொறியியலாளருமான திரு K. பாலச்சந்திரன் அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவற்றையெல்லாம் பெற்ற போதிலும் எமது தேவைகள் பூர்த்தியாகும் நிலையில் இல்லையென்றே கூறவேண்டியிருக்கின்றது. மேலும் புதிய கட்டிடங்களும் பழைய கட்டடங்களைப் புதுப்பித்து இக்காலத் தேவைகளுக்கு ஏற்றவாறு புனரமைப்புச் செய்யவும் வேண்டியிருக்கின்றது. இவற்றை நிறைவேற்ற எல்லோருடைய ஒத்துழைப்பும் எமக்கு வேண்டியுள்ளது என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

எமது பாடசாலையிலுள்ள காவல் தெய்வமாகிய வைரவரின் கோயிலையும் கட்ட வேண்டுமென்ற பெருவிருப்பு எம்மவர் எல்லோருக்குமுண்டு. பழைய மாணவர் சங்கம் இம்முயற்சியிலீடுபட்டு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அவர்களால் எடுக்கப்படும் முயற்சி பயனளிக்குமேயானால் அடுத்த ஆண்டு கோயிற் கட்டட வேலைகளும் ஆரம்பமாகும்,

மாணவர் தொகை

| | |
|---|---|
| தரம் 6—9 | —1000 |
| தரம் 10 | — 284 |
| தே. உ. க. த | — 188 |
| தரம் 11—12 | —476 |
| மொத்தம் | 1888 |

இவ்வாண்டு புதியவர்களாகச் சேர்ந்தவர்கள்

| | |
|---|---|
| தரம் 6 | — 201 |
| தே. உ. க. த | — 40 |
| தரம் 11 | — 8 |
| மொத்தம் | 284 |

அடுத்த ஆண்டில் 6ம் தரத்தில் புதியமாணவர்களைச் சேர்த்தல் பற்றி இதுவரை வித்தியா பகுதி தீர்மானிக்கவில்லை. தே. உ. க. தராதர வகுப்பிலும் க. பொ. த. உயர்தர முதலாம் வருட வகுப்பிலும் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் எங்கள் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டபின் வெற்றிடங்களுக்கு வெளிமாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

க. பொ. த. (சா. த) வகுப்பு அடுத்த வருடம் எல்லாப் பாடசாலைகளில் மூடப்படுவது போல் எமது பாடசாலையிலும் மூடப்படும்.

பரீட்சைப்பெறு பேறுகள்:

1. தேசிய பொதுக் கல்வித்தராதரப் பத்திரப் பரீட்சை 1975

| | |
|---|---|
| (1) தேசிய உயர்கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை வகுப்புகளுக்கு அனுமதிக்கத் தகுதி பெற்றோர் | 105 |
| (2) ஐந்து பாடங்களிலும் அவற்றிற்குக் கூடுதலாகவும் விசேடசித்தி பெற்றோர் | 16 |

செல்வன் S. இரஞ்சன் பத்துப்பாடங்களிலும் விசேடசித்தி பெற்றுள்ளார்.

2. க. பொ. த. ப (சாதாரணதர) மார்கழி 1975 இல் சித்தியடைந்தோர்

| | விஞ்ஞானம். | கலை. | மொத்தம் |
|---|---|---|---|
| (1) ஆறு பாடங்களிலும் கூடியபாடங்களிலும் | 153 | 12 | 165 |
| (2) ஐந்து பாடங்களில் | 37 | 7 | 44 |
| (3) க. பொ. த. ப. (உயர்தர) வகுப்புக்கு தகுதி பெற்றோர்: | | | 148 |

அபயகரன் ஜனகன் தூயகணிதம், பிரயோககணிதம், பௌதிகம், இரசாயனம், தமிழ்ப்பாஷை, இந்து சமயம். ஆகியபாடங்களில் விசேடசித்தியும் உயர்கணிதம், ஆங்கிலம் ஆகிய இருபாடங்களில் திறமைச்சித்தியும் பெற்றுள்ளார்.

3. க. பொ. த. (உயர்தரம்) 1976 சித்திரை

| | விஞ்ஞானம், | உயிரியல் | கலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 4 பாடங்களிலும் சித்தியடைந்தோர் | 53 | 16 | 11 | 80 |
| 3 பாடங்களில் சித்தியடைந்தோர் | 30 | 7 | 9 | 46 |

M. அருள்நேசன், S. உமாகாந்த சர்மா தூயகணிதம் பிரயோககணிதம் பௌதிகம் ஆகியபாடங்களில் அதிவிசேட சித்தியும் (A) இரசாயனத்தில் விசேட சித்தியும் (B) பெற்றுள்ளார்கள். S. குமாரதேவன் தூயகணிதம், பிரயோககணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களில் அதிவிசேட சித்தியும் இரசாயனத்தில் திறமைச் சித்தியும் பெற்றுள்ளார்.



ஆசிரியர் மாற்றங்கள்

1948-ம் ஆண்டிலிருந்து எமது கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றி 1971-ல் இருந்து உதவி அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். கனகநாயகம் அவர்கள் சென்ற யூன் மாத இறுதியில் சேவைக்கால வயது எல்லையை அடைந்ததன் காரணமாக இளைப்பாறியுள்ளார். சிறந்த ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியராக விளங்கினர். உதவி அதிபராக இருந்தகாலை அதிபர்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருந்து கல்லூரியின் அன்றாட நலன்களை நன்முறையில் பாதுகாத்துப் பேணிவளர்த்து வர கண்ணும் கருத்துமாக உழைத்து வந்தார். அவரது நீண்ட காலச் சேவையினால் கல்லூரி நற்பயன் அடைந்துள்ளது. அவரது தன்னலமற்ற இந்த சேவைக்கு எமது கல்லூரியின் நன்றியை தெரிவித்துக் கொண்டு இளைப்பாறுக் காலத்தில் சீரும் சிறப்புமாக அவர் வாழ இறைவன் வழிவகுப்பான் என்று வணங்கி வாழ்த்துகின்றோம்.

திரு. எஸ். கனகநாயகம் அவர்கள் இளைப்பாறியதன் பின்னர் வித்தியாபகுதியினர் எமது வேண்டுகோளை ஏற்று திரு. ஏ. கருணாகரர் B. Sc., திரு. எஸ். பொன்னம்பலம் B. Sc. Sp. Post Gr. II ஆகிய இருவரையும் இணை உதவி அதிபர்களாக நியமித்துள்ளது. பல வழிகளிலும் கல்லூரி வளர்ந்து வருகையில் நிர்வாகப் பழுவை பரவலாக்கி பகிர்ந்து கொள்வது மேலும் பல சீர் சிறப்புகளுடன் கல்லூரியை இயக்குவதற்கு உதவுகின்றது. இருவரையும் உதவி அதிபர்களாக நியமித்துத்தந்தமை பாடசாலையின் நலன் கருதிய செயலேயாம். எனவே இந்நியமனங்களைச் செய்துதவிய வடமாநில கல்விப் பணிப்பாளருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இரசாயனவியல் பாடத்தை உயர் வகுப்புகளில் கற்பித்து வந்த திரு. ஏ. சிவலிங்கம் B. Sc. அவர்களும், தமிழ், சைவசமயம், இந்து கலாச்சாரம் ஆகிய பாடங்களை உயர் வகுப்புகளில் கற்பித்துவந்த திரு. கே. கணபதிப்பிள்ளை B. A., வித்துவான் அவர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். திரு. எஸ் சுந்தரம்பிள்ளை B. A. அவர்களும், திரு. ஈ. ஆர். திருச்செல்வம் B. A. அவர்களும் நாடகத்துறையில் கல்வி டிப்புளோமா பயிற்சியைப் பெறுதற்காக படிப்பு லீவு பெற்றுச் சென்றுள்ளனர். திரு. எஸ். திசவீரசிங்கம், விசேட பயிற்சி (கணிதம்). திரு. கே. மகேசன் B. A., திரு. எஸ். கிருஷ்ணகுமார். விசேட பயிற்சி (விவசாயம்), திரு. என். தணிகாசலம்பிள்ளை B. A., திரு. எஸ். ஆறுமுகம், வித்துவான், திரு. சி. திருச்செல்வம் B. Sc. திரு. பி. கே. மகாலிங்கம் B. Sc. ஆகியோர் இடமாற்றம் மூலம் இங்கு கடமையேற்றுள்ளனர். முன்னர் இங்கு ஆசிரியர்களாகத்

கடமையாற்றி இடமாற்றம் பெற்று வெளியூரில் கடமையாற்றிய திரு. சி. முத்துக்குமாரசுவாமி (உயர் பயிற்சி) அவர்களும், திரு. ஏ இராசகோபால B. A., கல்வி டிப்புளோமா அவர்களும் மீண்டும் எமது கல்லூரிக்கு மாற்றலாகி வந்துள்ளனர். வசதிக் கட்டணப் பணத்தில் தற்காலிக சங்கீத ஆசிரியையாகக் கடமையாற்றிய செல்வி ரி. செல்லத்துரை நிரந்தர ஆசிரிய நியமனம் பெற்று தொடர்ந்தும் எம கல்லூரியில் கடமையாற்றி வருகின்ருர். முழு நேர மோட்டார் பொறித் தொழிற் போதனாசிரியராக திரு. ஆர். இலங்கேஸ்வரன் வசதிக் கட்டணப் பணத்தில் கடமையாற்றுகிருர்.

இதர ஊழியர்கள்

தொழிலாளியாகக் கடமையாற்றிய திரு. அலோசியஸ் அரசாங்க லிகிதர் சேவையில் நியமனம் பெற்று நுவரெலியா சென்றுள்ளார். அவ்வெற்றிடத்திற்கு திரு. இராமனுதன் இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

கல்லூரியின் எழுதுவினைஞராக 18 வருடகாலம் சேவையாற்றிய திரு. கோ. வேலாயுதபிள்ளை இம் மாதத்துடன் ஓய்வு பெறுகிருர். அவருடைய பண்பும் கடமையுணர்வும் ஆற்றலும் பாராட்டுக்குரியன. அவருடைய ஓய்வுகால வாழ்க்கை சீரும் சிறப்புமுடையதாக அமைய எம் வாழ்த்துக்கள்.

இந்து இளைஞர் சமுகம்

நாயன்மார் குருபூசைகள், சிவராத்திரி, நவராத்திரி, சேக்கிழார் விழா, திருக்கேதீஸ்வரத் திருவிழா ஆகியவற்றை வழமை போல் சிறப்பாக கொண்டாடிவரும் இக்கழகம் இவ்வாண்டு வெள்ளிக்கிழமை பிரார்த்தனை விசேட பூஜையை தனித்தனி வகுப்புகளிடம் ஒப்படைத்துள்ளது. சைவபரிபாலன சபை நடாத்தும் சமயபாடப் பரீட்சைக்குத் தோற்றிய எம் மாணவர் பலர் சிறப்புச் சித்தியெய்தினர்.

காப்பாளர்: திரு. கே: சிவராமலிங்கம், மாணவ தலைவர்: இ. சுதாகரன், செயலாளர்: என். தேவஜெகன்

கட்டுப்பாட்டு ஒழுங்கு சபையும் மாணவ முதல்வர் சபையும்.

இவ்வாண்டு உறுப்பினர் தொகை 32 ஆக அதிகரிக்கப்பட்டது. இதன் ஆசிரிய ஆலோசகராக திரு ஏ. கருணாகரர் கடமையாற்றுகிருர். இக்குழுவிற்கு புதிய சிரேஷ்ட மாணவ முதல்வராக செல்வன் க. ஹரிச்சந்திரா தெரிவு செய்யப் பட்டார் இம்முறை புதிதாக உதவி சிரேஷ்ட மாணவ முதல்வர் என்னும் பதவி அறிமுகம் செய்யப்பட்டு செல்வன் செ ஜெயப்பிரகாசம் தெரிவு செய்யப்பட்டார். இவர்கள் கல்லூரியின் கட்டுப்பாடு, ஒழுங்கு முதலியவற்றைப்



பேணுவதில் நிர்வாகத்திற்கு பேருதவி புரிந்து வருகின்றனர். இவர்களுக்கு வழிகாட்டியாக கட்டுப்பாட்டு ஒழுங்கு சபை இயங்குகிறது.

போட்டிகள்:

இலங்கை ஆசிரியர் சங்கம் நடாத்தும் பேச்சு, இசை, கட்டுரைப் போட்டிகளில் வழமை போல் கலந்து கொண்ட எம்மாணவர் பல வெற்றிகளை ஈட்டினர். இம்முறை கூடுதலான மாணவரை இவற்றில் ஈடுபடச் செய்யும் நோக்குடன் முதலில் வகுப்பு ரீதியாக போட்டிகளை நடாத்தி, பின்னர் இல்லரீதியாக இடம் பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ருரே வட்டாரப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர். கல்லூரி மாணவர் மத்தியில் பண்ணிசை, வரைதல், பொது அறிவுப் போட்டிகள் நடாத்தப் பட்டன. இவற்றுக்கு திரு. இ. மகாதேவா பொறுப்பாகவுள்ளார். இலங்கை விஞ்ஞான அபிவிருத்திக் கழகம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய விஞ்ஞானப் புதிர்ப் போட்டியில் எங்கள் கல்லூரிக்குழு இரண்டாமிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. திருவாளர்கள் எஸ். பொன்னம்பலம், பி. மகேஸ்வரன் ஆகியோர் இக் குழுவை நெறிப்படுத்தினர்.

விளையாட்டுகள்:

கிரிக்கட்: முதலாவது குழு 7 ஆட்டங்களில் 4 வெற்றிகளும் 2 தோல்விகளும் 1 சமநிலை முடிவும் பெற்றது.

இரண்டாவது குழு (16 வயதுக்குட்பட்டோர்) 4 ஆட்டங்களில் 1 வெற்றியும் 1 முதல் இன்னிங்ஸ் வெற்றியும் 2 முதல் இன்னிங்ஸ் தோல்வியும் அடைந்தது.

மூன்ருவது குழு (14 வயதுக்குட்பட்டோர்) 2 ஆட்டங்களில் 2 இலும் முதல் இன்னிங்ஸ் தோல்வியடைந்தது.

பொறுப்பாசிரியர்: திரு. பொ. மகேந்திரன்
பயிற்சியளிப்பவர்: குழு I திரு. ரி. கிருஷ்ணசாமி
குழு II திரு. யோ. நரேன்
குழு III திரு. யோ. நரேன்

உதைபந்தாட்டம்: முதலாவது குழு யாழ்ப்பாணக் கல்லூரிகள் விளையாட்டுச் சங்கப் போட்டியில் கால் இறுதி ஆட்டம் வரை வெற்றியீட்டியது. ஆடிய 6 ஆட்டங்களில் 3 வெற்றியும் 2 சமநிலை முடிவும் 1 தோல்வியும் அடைந்தது.

இரண்டாவது குழு மேற்படி போட்டியில் சம்பியனாக வாகை சூடியது. ஆடிய 10 ஆட்டங்களில் 8 வெற்றியும் 1 சமநிலை முடிவும் 1 தோல்வியும் பெற்றது.

மூன்ருவது குழுவும் கால் இறுதியாட்டம் வரைதான் முன்

னேறியது. 9 ஆட்டங்களில் 8 வெற்றியும் 1 தோல்வியும் அடைந்தது.

இணைத்தலைவர்களாக கடமையாற்றிய ஆர். ராஜேந்திரமும் எஸ். ஜெயப்பிரகாசமும் யாழ்ப்பாண இளைஞர் கோஷ்டியில் அங்கம் வகித்தனர்.

சிங்கப்பூரில் நடைபெற்ற 7வது ஆசிய பாடசாலைகள் சர்வதேசப் போட்டியில் இலங்கைப் பாடசாலைகள் குழுவில் எஸ். தயாளனும், என். வித்தியாதரனும் இடம் பெற்றனர்.

| | பொறுப்பாசிரியர் | பயிற்சியளிப்பவர் |
|---|---|---|
| முதலாவது குழு | திரு. ஆர். துரைசிங்கம் | திரு. வி. நடராஜா |
| இரண்டாவது குழு | திரு. அ. கருணாகரர் | திரு. யோ. நரேன் |
| மூன்றாவது குழு | திரு. எஸ். புண்ணியலிங்கம் | திரு. யோ. நரேன் |

மெய்வல்லுநர்ப் போட்டிகள்:

எங்கள் 8 ஆவது வீதியோட்டத்தில் 421 போட்டியாளர் பங்குபற்றினர். அதை நடாத்த வடமாகாண பொலிஸ் அத்தியட்சகரும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி திரு. ரி. சேனாதிராஜாவும் உதவினர். எங்கள் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பழைய மாணவரும் விளையாட்டு வீரருமான வைத்திய கலாநிதி சி. கே. துரைரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். காசிப்பிள்ளை இல்லம் சம்பியனாக வெற்றியீட்டியது. கொழும்பில் நடைபெற்ற இலங்கைப் பாடசாலைகள் சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் எஸ். கரன்சிங் தடியூன்றிப் பாய்தலில் முதலாவது இடத்தைப் பெற்றார். 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தடியூன்றிப் பாய்தலில் எஸ். தயாளன் 9' 10" பாய்ந்து ஒரு புதிய சாதனையை நிலைநாட்டினார்.

கண்டியில் நடைபெற்ற இலங்கைப் பாடசாலைகள் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் 16 வயதுக்குட்பட்டோர் பிரிவில் உயரம் பாய்தலில் ரி. ரவீந்திரன் முதலாவது இடத்தைப் பெற்றார்.

யாழ்ப்பாண மத்தியவலைய சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 11 முதலாமிடங்களையும் 10 இரண்டாமிடங்களையும் 4 மூன்றாமிடங்களையும் பெற்றோம். 17 வயதுக் குட்பட்டோர் பிரிவில் 7 முதலாமிடங்களையும் 8 இரண்டாமிடங்களையும் 7 மூன்றாமிடங்களையும் பெற்றோம்.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் 1976 ஆம் ஆண்டு நடாத்திய மெய்வல்லுநர் போட்டியில்



எமது கல்லூரி 888 புள்ளிகள் பெற்று சம்பியனாக வெற்றிபெற்றது.

இச் சாதனையைத் தொடர்ந்து மூன்றாவது வருடமாக நிலைநாட்டியுள்ளோம்.

இரண்டாவது இடத்தைப் பெற்ற பாடசாலையிலும் பார்க்க 118 புள்ளிகளை மேலதிகமாகப் பெற்று வெற்றியீட்டினோம்.

19 வயதுப் பிரிவில் 165 புள்ளிகளையும், 17 வயதுப் பிரிவில் 178 புள்ளிகளையும் பெற்று இவ்விரு பிரிவுகளிலும் தனித்தனி சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டோம்.

அஞ்சலோட்டப் போட்டியிலும் 50 புள்ளிகளைப் பெற்று அஞ்சலோட்டச் சம்பியனாகவும் தெரிவு பெற்றோம்.

19 வயதுப் பிரிவில் 5 முதலாமிடங்களையும் 7 இரண்டாமிடங்களையும் 5 மூன்றாமிடங்களையும் பெற்றோம்.

17 வயதுப் பிரிவில் 6 முதலாமிடங்களையும் 7 இரண்டாமிடங்களையும் 3 மூன்றாமிடங்களையும் பெற்றோம்.

19 வயதுப் பிரிவில் சுவட்டு நிகழ்ச்சிகளில் செல்வன் கே. லோகேந்திரன் 110 மீற்றர் தடைதாண்டி ஓடும் நிகழ்ச்சியில் 17·8 செக்கண்டில் ஓடி முடித்து அதிசிறந்த சாதனைக்குரிய வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றார்.

இதேபிரிவில் மைதான நிகழ்ச்சிகளில் செல்வன் எஸ். தயாளன் தடியூன்றிப் பாய்தலில் 10 அடி 6 அங்குலத்தைத் தாண்டி அதிசிறந்த சாதனைக்குரிய வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றார்.

17 வயதுப் பிரிவில் செல்வன் ரி. இரவீந்திரன் 30 புள்ளிகளைப் பெற்றுப் பிரிவுச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

19 வயதுப் பிரிவில் செல்வன் எஸ். தயாளன் 27 புள்ளிகளைப் பெற்று இப்பிரிவின் சம்பியனானார்.

அடுத்த மாதம் நடைபெறும் அகில இலங்கைப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகளிலும் எமது பாடசாலை சார்பாகப் பலர் கலந்து வெற்றிகள் பல ஈட்டுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

பொறுப்பாசிரியர்: திரு. ரி. ஸ்ரீவிசாகராஜா

ஹொக்கி: யாழ்ப்பாணக் கல்லூரிகள் ஹொக்கிச் சங்கம் நடாத்திய 17 வயதுக் குட்பட்டோருக்கான போட்டியில் எங்கள் குழு 5 ஆட்டங்களில் 3 வெற்றியும் 2 சமநிலை முடிவும் பெற்று கோல் சராசரியினால் 2 ஆவது இடத்தைப் பெற்றது.

பொறுப்பாசிரியர்: திரு. என். சோமசுந்தரம்

பயிற்சியளிப்பவர்: ஆர். சி. ராமநாதன்

கூடைப்பந்தாட்டம்: யாழ்ப்பாண கூடைப்பந்தாட்டச் சங்கம் 17 வயதுக் குட்பட்டோருக்கிடையே நடாத்திய போட்டியில் எங்கள் குழு 1975 இல் 8 ஆட்டங்களில் 8 வெற்றியும் 1 தோல்வியும் அடைந்து இணைச் சம்பியனாகியது. 1976 இல் தோல்வியே அடையாமல் சம்பியனாகியது. அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையேயான 18 வயதுக் குட்பட்டோர் போட்டியில் எங்கள் குழு கலந்துகொண்டது.

பொறுப்பாசிரியர்: திரு. ரி. துரைராஜா

சதுரங்கம்: 15 உறுப்பினர்களைக் கொண்டது சதுரங்கக் கழகம் நடாத்திய போட்டிகளின் முடிவுகள்.

19 வயதுக் குட்பட்டோர்: 1. எஸ். சிவானந்தன்
2. எம். நிரஞ்சன்
16 வயதுக் குட்பட்டோர்: 1. எம். நிர்மலன்
2. கே. ஸ்ரீஸ்கந்தராஜா
14 வயதுக் குட்பட்டோர்: 1. எம். நிருத்தன்
2. ஆர். பாரதி

சென்ற ஆண்டு யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. நடாத்திய போட்டிகளில் பின்வருவோர் வெற்றிகளையீட்டினர்:

18 வயதுக் குட்பட்டோர் கே. பாஸ்கரன் 1 ஆம் இடம்
16 வயதுக் குட்பட்டோர் எம். நிரஞ்சன் 1 ஆம் இடம்
14 வயதுக் குட்பட்டோர் எம். நிர்மலன் 1 ஆம் இடம்
14 வயதுக் குட்பட்டோர் வி. மோகன் 2 ஆம் இடம்

அதே போட்டியில் இவ்வாண்டு எம். நிரஞ்சன் 18 வயதுக் குட்பட்டோர் போட்டியில் முதலாமிடத்தையும் எஸ். உதயணன் இரண்டாமிடத்தையும் பெற்றனர். இக்கழகம் "புறூக் பொண்ட்" ஸ்தாபனத்தார் நடாத்தும் அகில இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கப் போட்டியிலும் கலந்துகொண்டது. பயிற்சியளிப்பதில் உறுதுணையளிக்கும் வைத்திய கலாநிதி வி. அம்பலவாணர் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவர்.

பொறுப்பாசிரியர்: திரு. ரி. துரைராஜா

விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்: திரு. என். சோமசுந்தரம்
உதவிப் பொறுப்பாசிரியர்: திரு. ஆர். துரைசிங்கம்

படைபயில் குழு:

இம்முறை வருடாந்த பாசறை நடைபெறாததினால் எங்கள் சிரேஷ்ட படைபயில் குழு பாசறையில் கலந்துகொள்ளவில்லை. எங்கள் கனிஷ்ட குழு பலாலி ஆசிரியர் கல்லூரியில் நடைபெற்ற பாசறையில் நாற்பது பாடசாலைகளுடன் கலந்து கொண்டு மெய்வல்லுநர் போட்டியில் முதலாமிடத்தையும், நாடகப்போட்டியில் மூன்றாமிடத்தையும், உடல்பயிற்சிப் போட்டியில் ஏழாமிடத்தை



யும் பெற்றதுடன் மொத்தப் புள்ளியடிப்படையில் நான்காவது இடத்தையும் பெற்றது. சுமார் 150 பாடசாலைகள் கலந்துகொண்ட அகில இலங்கை ரீதியிலான மெய்வல்லுநர் போட்டியில் இக்குழு முதலாமிடத்தைப் பெற்றமை ஒரு அரிய சாதனையாகும். பயிலுநர் ஆர். சிவகுமாரன் உயரம் பாய்தலில் முதலாமிடத்தைப் பெற்றார்.

கோப்பிறல் ராஜேந்திரம், பயிலுநர் மனோகரன் ஆகியோர் படைபயில் பட்டாள வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் 5ஆம் படையின் சார்பில் பங்குபற்றினர்.

லான்ஸ் சார்ஜன்ட் எஸ். நந்தகுமார் ஸ்ராவ் சார்ஜன்ட் ஆக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

லெவ்ரினன்ட் என். சோமசுந்தரம் கொழும்பில் அணிசேரா மகாநாட்டின்போது பொறுப்புள்ள ஒரு உத்தியோகத்தராக கடமையாற்றினார்.

உத்தியோகத்தர்கள்:

சிரேஷ்ட குழு: லெவ்ரினன்ட் என். சோமசுந்தரம்
கனிஷ்ட குழு: 2/லெவ்ரினன்ட் என். சந்தியாப்பிள்ளை

ஸ்ரீலங்கா பொலிஸ் படைபயில் குழு:

உப படைத்தலைவரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான திரு எஸ். வாமதேவன் இக்குழுவைப் பரிசோதித்தார்.

திரு த. சேனாதிராஜா, போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அதிகாரி அவர்களினால் வீதி ஒழுங்கு பற்றியும் திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் அவர்களினால் முதலுதவி பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. தலைமைக்காரியாலயத்திலிருந்து திருவாளர்கள் பொடிமுலஹமி, பந்துல, கிருபாகரன் ஆகியோரால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற யாழ்மாவட்ட கல்விப் பொருட்காட்சியின் போது பாராட்டும் வகையில் பணியாற்றியதுடன் கல்லூரியில் நடைபெறும் சகல விசேஷ வைபவங்களின் போதும் இக்குழு கடமையாற்றி வருகிறது.

இவர்களின் வருடாந்த பாசறை -10-76 இலிருந்து களுத்துறை தெற்கிலுள்ள பொலிஸ்கல்லூரியில் நடைபெற இருக்கிறது. பொலிஸ் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் எமது குழு 4 × 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றது. உப பரிசோதகராக இருந்த ஏ. மரியதாஸ் பரிசோதகராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

பிரதேச பொலிஸ் பரிசோதகர்: திரு. வே. சுந்தரதாஸ்
சார்ஜன்ட்: தி. திருநந்தகுமார்

சாரணர் குழு

எங்கள் கல்லூரியில் இவ்வியக்கம் ஆரம்பித்து 60 ஆண்டுகளானதையொட்டி 4 5-76, 15-5.76 ஆகிய திகதிகளில் வைர விழா கொண்டாடப்பட்டது. பழைய சாரணர் மதிய போசன சந்திப்பு, வைர விழா மலர் வெளியீடு. தேசிய பிடவைக் கூட்டுத்தாபன பொறியியல் வல்லுநர் எஸ்: சிவலோகநாதன் திறந்து வைத்த சாரணர் கண்காட்சி, எச்: டபிள்யூ' கேவ் அன்ட்கோ கணக்காளர் திரு: கே. பிரபாசந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பங்கு பற்றிய சாரணர் கலைக்கதம்பம், தேநீர் விருந்து, எரிபொருள் கூட்டுத்தாபன பொறியியலாளர் திரு. என்' சிவபாதசுந்தரம் திறந்து வைத்த பாசறை வாசம், வடிகல் நிர்மாணப் பொறியியலாளர் என். மகேந்திரன் திறந்து வைத்த நிலை. திடற்காட்சிகள் தேசிய சாரணர் பதில் பயிற்சி ஆணையாளர் திரு: ஹேமபாலரத்தின சூரிய பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வைரவிழா ஆகியவை சிறப்பு அம்சங்களாக இடம்பெற்றன. முதல் நாள் நிகழ்ச்சிகளில் யாழ் மாவட்ட அரசியல் அதிகாரி திரு. ஸி. அருளம்பலமும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆணையாளர் திரு. ஏ. ஸி. நாகராசாவும் கலந்து கொண்டனர். திரு ரத்தின சூரிய சாரணர் விருதுகளையும் திருமதி ரத்தின சூரிய சாரணர் பரிசில்களையும் வழங்கினர்.

இம்மாதம் 23, '4, 25 ஆம் திகதிகளில் நடைபெற்ற யாழ் மாவட்ட சாரணர் வைரவிழாப் பாசறையில் எமது பாடசாலைச் சாரணர் குழு (4 வது யாழ்ப்பாணம்) ரேட்டரிச் சுற்றுக் கேடயத்தைப் பெற்று இவ்வாண்டும் முதலிடத்தைப் பெற்றது. 1971 ஆம் ஆண்டு தொடக்கம் ரேட்டரிச் சுற்றுக் கேடயத்தை நாங்களே பெற்று வருகிறோம் என்பதை மகிழ்ச்சிப் பெருக்குடன் குறிப்பிடுகிறேன்.

மேற்படி பாசறையில் நாம் சாதித்த பாராட்டுக்குரிய சாதனைகள்:-

| | | |
|---|---|---|
| 1 | பாசறைத் தீ நிகழ்ச்சி | முதலாம் இடம் |
| 2. | ஜனாதிபதிச் சின்னம் | ,, ,, |
| 3. | குழுவின் பதிவேடு | ,, ,, |
| 1. | திடற் காட்சி | இரண்டாம் இடம் |
| 2. | நிலைக்காட்சி | ,, ,, |
| 3. | பாசறை அமைப்பு | ,, ,, |
| 4. | சமூக சேவை | ,, ,, |

கண்டியில் நடைபெற்ற 26 ஆவது அகில இலங்கைத் திரிசாரணர் சம்மேளனத்தில் இரண்டு சாரண ஆசிரியர்களும் ஆறு சாரணர்களும் பங்கு பற்றினர்.



றோயல் கல்லூரியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சாரணர் சங்க ஆண்டு விழாவில் குழுச் சாரண ஆசிரியரும் ஒன்பது சாரணர்களும் கலந்து கொண்டனர். யாழ்மாவட்டத்தில் மிகக் கூடுதலான ஜனாதிபதிச் சாரணச் சான்றிதழ்களை (9) எமது குழு இவ்விழாவில் பெற்றது.

எமது குழுச்சாரணத்தலைவர் தொடர்ந்து மாவட்டசாரணர் தலைவராகவும் யாழ் மாவட்ட சாரணர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினராகவும் கடமையாற்றுகிறார்

நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவங்களின் போது எமது குழு யாழ்மாநகரசபை ஆணையாளரின் வேண்டுகோளுக்கிணங்க கடமையிலீடுபட்டது.

காவுரநகர் கஷ்டறிஞ கடற்கரையில் ஒன்றும் கல்லூரியில் ஒன்றுமாக இரு பாசறை வாசங்களை இக்குழு இவ்வருடம் மேற்கொண்டது.

குழுச்சாரணத்தலைவர் : திரு நா: நல்லையா
சாரணத்தலைவர்கள் : திரு. ரி. துரைராஜா
திரு. எம். ஆறுமுகசாமி
திரு. பி தில்லைநாதன்

குருளைச்சாரணர் குழு:

இப்போது 9 மந்தைகளில் 54 குருளைச் சாரணர்கள் உள்ளனர். சர்வதேச குருளைச் சாரணர் வைரவிழாவின் முன்னோடி நிகழ்ச்சியாக இக்குழுவினரும் தொடர்பு கொண்டவர்களுமாக 60 பேர் விமான மூலம் 19-6-76 இல் கொழும்பு சென்று கொழும்பு இந்துக் கல்லூரி (ரத்மலானை) பாசறைத்தீ நிகழ்ச்சியிலும், அகில இலங்கை காந்திய சேவா சங்க கொழும்புக் கிளையின் சர்வோதய நிகேதனத்தில் சிரமதானத்திலும் பங்கு கொண்டதுடன் மிருகக்காட்சிச்சாலை நூதனசாலை, விகாரமகாதேவி பூங்கா, சாரண இயக்கத் தலைமைக் காரியாலயம், லேக்ஹவுஸ் நிறுவனம், துறைமுகம் முதலிய இடங்களைப் பார்வையிடும் சுற்றுலா ஒன்றையும் மேற்கொண்டனர். இது நிறைவேற கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர், அக்கல்லூரிச் சாரணர்கள், காந்திய சேவா சங்கம், திரு: திருமதி சோ: க. தம்பிப்பிள்ளை முதலியோர் உறுதுணை புரிந்தனர்.

யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெற்ற முதலுதவி வகுப்பில் இரு குருளைச்சாரண ஆசிரியர்களும் ஏழு குருளைச் சாரணர்களும் அறுவர் தின விழாவில் இரு தலைவர்களும் ஆறு அறுவர் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

உதவிக் குருளைச் சாரணர் தலைவராக கடமையாற்றிய திரு ந. விவேகானந்தன் உயர் கல்விக்காக கொழும்பு சென்றுள்ளார்கையால் அவருடைய இடத்துக்கு திரு. ரி. ஸ்ரீவிசாகராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

எங்கள் குருளைச்சாரணத் தலைவர் யாழ் மாவட்ட சாரண சங்கத்தின் குருளைச்சாரண சபையில் பத்திராதிபராகவும் நிர்வாக முகாமையாளராகவும் கடமையாற்றுகிறார்; சாரணர் வைரவிழாவிலும் இவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

குருளைச் சாரணர் தலைவர்: திரு மா. புவனேந்திரன்
குருளைச் சாரணர் உபதலைவர்: திரு. ரி. ஸ்ரீவிசாகராஜா

கல்விச்சுற்றுலாக்கள்:

திருவாளர்கள் ரி. அருளானந்தம், எஸ். சுந்தரம்பிள்ளை ஆகியோர் தலைமையில் மார்ச் மாதத்தில் 80 மாணவர்கள் வெளிமாவட்டச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு பொலநறுவை, சிகிரியா, மிகிந்தலை முதலான இடங்களைப் பார்வையிட்டனர்.

திருவாளர்கள் வி. பரமநாதன், ரி. அருளானந்தம், ரி. ஸ்ரீவிசாகராஜா ஆகியோர் தலைமையில் செப்ரெம்பர் மாதத்தில் 85 ஆறும் வகுப்பு மாணவர்கள் யாழ் குடாநாட்டினுள் உள்ள தொழிற்சாலைகள், விவசாயப்பண்ணைகள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

திருவாளர்கள் வி. பரமநாதன், கே. செல்வரத்தினம், பி. வில்வராஜா ஆகியோர் தலைமையில் நவம்பர் மாதத்தில் 75 எட்டாம் வகுப்பு மாணவர்கள் யாழ் குடாநாட்டினுள் ஒரு கல்விச் சுற்றுலாவினால் பயனடைந்தனர்.

உயர்தர வகுப்பு மாணவர்கள் திரு ஆர். சிவநேசன் தலைமையில் டப்புல்லா, சிகிரியா, அநுராதபுரம் ஆகிய இடங்களுக்கு கல்விச் சுற்றுலா சென்று வந்தனர்.

சங்கங்கள்:

உயர்தர மாணவர் முதலாம், இரண்டாம் வருட மாணவர் ஒன்றியங்கள், விஞ்ஞான மாணவர் ஒன்றியங்கள், சரித்திர குடிமையியற் சங்கம், புவியியற் கழகம், வர்த்தக மாணவர் மன்றம் ஆகியவை முறையே திருவாளர்கள் ச. பொன்னம்பலம், ச. மகேஸ்வரன் ம. சி. பிரான்சிஸ், அ. கருணாகரர், எஸ். சோமசேகரசுந்தரம், எஸ். கந்தப்பிள்ளை, ஏ. ராஜகோபால், ரி. அருளானந்தம், வி. சண்முகராசா, ரி. வில்வராஜா ஆகியோரை உபபுரவலர்களாக கொண்டு இயங்குகின்றன. உரைகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், விவாதங்கள், கேள்வி - பதில், சுற்றுலாக்கள்



ஆகியவை முக்கிய இடம் பெறுகின்றன. திரு. இ. மகாதேவாவை வழிகாட்டியாகக் கொண்டு இயங்கும் செவி - கட்புலச் சாதனங்கள் சங்கம் பிரார்த்தனை ஒலிபெருக்கிச் சேவை, விசேஷ வைபவங்களுக்கு ஒலி, ஒளி ஒழுங்குகள், ஒலிப்பதிவு மூலம் பேச்சுக்கலைப் பயிற்சி, அறிவு விருத்தி - விளையாட்டுப் பயிற்சிகளுக்கான திரைப்படக் காட்சிகள் ஆகிய பணிகளை மேற்கொண்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி:

வடமாகாணத்தில் முதலாவதாக தேசிய சேமிப்பு வங்கியின் பாடசாலைக்கிளை எங்கள் கல்லூரியில் தான் 1- 0-75 இல் திறந்து வைக்கப்பட்டது. சேமிப்பு, சிக்கனம் ஆகியவற்றை ஊக்க நிறுவப்பட்ட இக்கிளையில் இதுவரை 498 மாணவர்கள் ரூபா 10,898-50 ஐ வைப்பிட்டுள்ளனர்.

பொறுப்பாசிரியர்: திரு. எஸ். சிவசுப்பிரமணிய சர்மா
முகாமையாளர்: இ. ராஜரத்தினம்
காசாளர்: சு. விவேகானந்தராஜா
எழுதுவினைஞர்கள்: ப. ஜெயகுமார்
ந. ஸ்ரீதரன்

ஆசிரிய கழகம்:

ஆசிரியர் அனைவரையும் உறுப்பினராய் கொண்டு இயங்கும் இக்கழகம் ஆசிரிய நலன்களைக் கவனிப்பதுடன் சமய, பொதுநல நிறுவனங்களுக்கு நிதி உதவியும், கல்லூரி மாணவ குழுக்கள் ஈட்டும் சிறமையான சாதனைகளுக்கு பாராட்டளித்தும் பொழுது போக்குச் சுற்றுலாக்களை மேற்கொண்டும் நற்பணியாற்றி வருகிறது. ஓய்வு பெற்ற அதிபர் திரு இ. சபாலிங்கத்துக்கும் பதில் அதிபர் திரு. எஸ். கனகநாயகத்துக்கும் இராப்போசன விருந்தும் பொற்கிழியும் அளித்துக் கௌரவித்தது. தனியார் பொறுப்பில் பலகாலம் இயங்கிவந்த கல்லூரிச் சிற்றுண்டிச்சாலையை இவர்கள் இவ்வாண்டிலிருந்து பொறுப்பேற்றுள்ளனர்.

கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடனுதவிச் சங்கம்: கல்லூரி ஆசிரியர்கள், ஊழியர்கள் மத்தியில் சேமிப்பை ஊக்கியும் கஷ்ட நிவாரண கடனுதவி செய்தும் வருகிறது.

தலைவர்: திரு. ஏ. கருணாகரர்
செயலாளர்: திரு. பொ. வில்வராஜா
பொருளாளர் திரு. வே. யோசவ்

இவர்கள் தொங்கல் பணமாக இருந்த 800/- ஐ உயர் தேசிய கல்வித்தராதர வகுப்பு ஆய்வுகூட விஸ்தரிப்புக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். அவர்களுக்கு எம் நன்றி.

விடுதிச்சாலை:

விடுதி மண்டபங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. பல வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஓய்வு பெற்ற சிரேஷ்ட சமையல் ஊழியர் திரு. ச. முருகேசுவுக்கு ஒரு பிரிவுபசார விருந்தும் பொற்கிழியும் அளிக்கப்பட்டன. விடுதிமாணவரின் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்திகரமாயுள்ளன. இப்போதுள்ள விடுதிமாணவரின் தொகை 185

சிரேஷ்ட விடுதி மாணவ முதல்வர்: ஆர். சி. ராமநாதன்
(இரண்டாம் பருவம் வரை)
தா. சிறீதரன்

சிறிது கால இடை வெளிக்குப் பின் திரு க. சிவராமலிங்கம் பாதுகாவலராகவும் திரு. எஸ். சந்தியாப்பிள்ளை உதவியாளராகவும் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளனர் திரு கே. சிதம்பரநாதன் தொடர்ந்து உதவியாளராகப் பணியாற்றுகிறார்.

பெற்றார் ஆசிரியர் சங்கம்

திரு. அ. கருணாகரரை செயலாளராகவும் திரு V. அரியநாயகத்தை பொருளாளராகவும் ஒன்பது செயற்குழு உறுப்பினரையும் கொண்டு இயங்கும் இச்சங்கம் கட்டட நிர்மாண அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு செயல்படுகின்றது. துரிதமாக பல வேலைகளை நிறைவேற்றியமை பாராட்டுக்குரியது.

பழைய மாணவர் சங்கம்

குமாரசுவாமி மண்டபப் பூர்த்தி, ஆலய நிர்மாணம் ஆகியவை பற்றிய தீவிர ஆலோசனையும் முயற்சியும் எடுத்து வரும் இச் சங்கம் கல்லூரியின் புதிய கட்டட நிர்மாணத்துக்கு ரூபா 15,000 கடனாக வழங்கியுள்ளது.

தலைவர் : திரு. ஸி. அருளம்பலம்
செயலாளர் ; திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்

நன்றி :

கல்லூரி நிர்வாகத்தின் பொறுப்பை பகிர்ந்து கடமைபுரியும் உதவி அதிபர்கள், திருவாளர்கள் ஏ. கருணாகரருக்கும் எஸ் பொன்னம்பலத்துக்கும், சகல ஆசிரியர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் என்னுடைய நன்றி உரியதாகும்.



இவ்வறிக்கையில் ஆங்காங்கே விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பிறருக்கும் அவர்களுடைய சேவைக்கும் சாதனைகளுக்கும் எம் பாராட்டுகளும் நன்றியும் உரித்தாகும்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர், வட்டாரக் கல்வி அதிகாரி திரு: கு. சோமசுந்தரம், கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் அளித்து வரும் ஒத்துழைப்புக்கு நாம் மிகுந்த கடப்பாடுடையோம்.

கல்லூரி வளர்ச்சியில் கரிசனை காட்டி வரும் பெற்றோர், பழைய மாணவர், அபிமானிகள் எல்லோருக்கும் எம் நன்றி. இவ்விழா நிதிக்கு உதவி செய்த பெரியார்களுக்கும் நாம் நன்றியுடையோம்.

இவ் வைபவத்துக்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் நன்றி கூறுவதில் நான் உவகையும் பூரிப்பும் அடைகிறேன்.

வணக்கம்.

# பரிசில்கள் வழங்கியோர் - 1976

| | |
|---|---|
| திரு. சிவா பசுபதி | திரு. சி. நாகராஜா |
| வைத்திய கலாநிதி யோகு பசுபதி | திரு. T. S. பேரின்பநாதன் |
| வைத்திய கலாநிதி ந.. இராசகுமாரன் | திரு. S. பாலசுந்தரம் |

## ஞாபகார்த்தப் பரிசில்கள்

சிந. மூ. பசுபதிச் செட்டியார் ஞாபகார்த்த நிதி
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
சின்னத்தம்பி நாகலிங்கம்
தாமோதரம்பிள்ளை செல்லப்பா
வில்லியம் நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை
என். எஸ். பொன்னம்பலபிள்ளை
கதிர்காமுச் செட்டியார் சிதம்பர சுப்பையாச் செட்டியார்
சிதம்பர சுப்பையாச் செட்டியார் முத்துக்குமாருச் செட்டியார்
விசுவநாதர் காசிப்பிள்ளை
ஆர். எச். லீபிறகன்
பி. குமாரசாமி
பி. அருணுசலம்
தம்பு கையிலாசபிள்ளை
அருணுசலம் சபாபதிப்பிள்ளை
முத்துக்குமாருச் செட்டியார் பசுபதிச் செட்டியார் ஆகியோர்
ஞாபகார்த்தமாக

| | |
|---|---|
| திருமதி வ. அருளம்பலம் | தன் கணவர் அ. அருளம்பலம் ஞாபகார்த்தமாக |
| திரு. ஷண்முக குமரேசன் | தன் தந்தையார் A R. சண்முகரத்தினம் ஞாபகார்த்தமாக. |
| | தன் சகோதரன் S R. சுந்தரேசன் ஞாபகார்த்தமாக. |
| திரு. வி. கயிலாசபிள்ளை | அருணுசலம் செல்லப்பா J. P. ஞாபகார்த்தமாக. |
| | தன் தந்தை திரு. க. விசுவநாதர் தன் தாய் திருமதி பா. விசுவநாதர் ஞாபகார்த்தமாக |
| திரு க. இ. கதிர்காமலிங்கம் | தன் மைத்துனர் கு. வன்னியசிங்கம் ஞாபகார்த்தமாக |
| | தன் மாமனுர் 'சிவநெறிக் காவலர்' த. முத்துசாமிப்பிள்ளை ஞாபகார்த்தமாக. |
| திரு. வ. சுப்பிரமணியம் | தன் மாமனுர் வைத்திய கலாநிதி சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக |
| யா. இ க. கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் உதவிச் சங்கம் | திரு. K. அருணுசலம் ஞாபகார்த்தமாக |
| திரு. C K இலங்கைராசா | தன் தந்தையார் செல்லப்பா (சோதி) கந்தையா ஞாபகார்த்தமாக |
| திருமதி கே சதாசிவம் | தன் கணவர் திரு. மு. சதாசிவம் ஞாபகார்த்தமாக. |
| திரு. வ. மகாதேவன் | தன் தந்தையார் திரு. M. வைத்திலிங்கம் ஞாபகார்த்தமாக |
| | தன் பெரிய தந்தையார் டாக்டர் M. வைத்தியலிங்கம் (மலேசியா) ஞாபகார்த்தமாக |
| திரு த. சேனுதிராசா | திரு. A. தனபாலசிங்கம் ஞாபகார்த்தமாக |
| | திரு. C. சபாரத்தினம் ஞாபகார்த்தமாக |
| வைத்திய கலாநிதி வே. யோகநாதன் | தன் தந்தையார் கந்தையா வேலுப்பிள்ளை ஞாபகார்த்தமாக |
| | தன் தாயார் வேலுப்பிள்ளை மாணிக்கம் ஞாபகார்த்தமாக |
| திரு. ப. கதிரவேலு J.P U.M. | தன் தந்தையார் புங்குடுதீவு வ. பசுபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக |
| | தன் சகோதரன் ப. முத்துக்குமாரு ஞாபகார்த்தமாக |
| திரு. S சிவலோகநாதன் | ருஷ்ய எழுத்தாளன் மார்க்சிம் கோர்க்கி ஞாபகார்த்தமாக |
| திரு. வீ. சிவசுப்பிரமணியம் | திரு. க. சு. வீரவாகு ஞாபகார்த்தமாக |

| | |
|---|---|
| திரு. கே. சி. தங்கராசா | தன் மாமனுர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் இலக்கண சுவாமிகள் ஞாபகார்த்தமாக. |
| | தன் தந்தையார் கந்தப்பிள்ளை சிற்றம்பலம் ஞாபகார்த்தமாக |
| | தன் தாயார் தையல்நாயகி சிற்றம்பலம் ஞாபகார்த்தமாக |
| | தன் பாட்டியார் வேலுப்பிள்ளை சிவகாமித்தாய் ஞாபகார்த்தமாக. |
| திருமதி கே. சி. சண்முகரத்தினம் | தன் கணவர் வைத்திய கலாநிதி கே. சி. சண்முகரத்தினம் ஞாபகார்த்தமாக |
| திருமதி மீனும்பாள் வைத்திலிங்கம் | திருமதி இராசம்மா வீரவாகு ஞாபகார்த்தமாக. |
| திரு இ. விசுவநாதன் | டாக்டர் க. ராஜா (வண்ணார்பண்ணை ஞாபகார்த்தமாக. |
| திரு W. S. செந்தில்நாதன் | புத்துவாட்டி N. சோமசுந்தரம் ஞாபகார்த்தமாக<br>(சங்கீதத்தில் சிறந்த மாணவனுக்கு) |
| வைத்திய கலாநிதி க. சிவஞானரத்தினம் | தன் தந்தையார் வைத்திய கலாநிதி சி. கனகரத்தினம் ஞாபகார்த்தமாக (பண்ணிசையில் சிறந்த மாணவனுக்கு) |
| வைத்திய கலாநிதி கு. பாலகிருஸ்ணன் | தன் தந்தையார் திரு. N. குமாரநாயகம் ஞாபகார்த்தமாக. |
| திரு. V. சுப்பையா J. P. | தன் மனைவி கசந்திமதி சுப்பையா ஞாபகார்த்தமாக<br>க பொ த. (சாதாரணம்) மார்கழி 1975 பரீட்சையில் மிகத் திறமையாகச் சித்தியடைந்த மாணவனுக்கு) |
| திரு. த இராஜேஸ்வரன் | தன் தந்தையார் திரு. A. தனபாலசிங்கம் ஞாபகார்த்தமாக |
| வைத்திய கலாநிதி சி. இராசா | திரு. V. நாகலிங்கம் ஞாபகார்த்தமாக |



| | |
|---|---|
| திருமதி L. பாலசிங்கம் | தன் கணவர் சட்டத்தரணி மயில்வாகனம் பாலசிங்கம் ஞாபகார்த்தமாக |
| திரு. ச. பாலசுந்தரம் | தன் தந்தையார் வேலனை கதிரேசு சண்முகம் ஞாபகார்த்தமாக |
| | தன் மாமனுர் வித்துவான் க. கார்த்திகேசு ஞாபகார்த்தமாக |
| திரு. பொ. ச. குமாரசுவாமி | யாழ் இந்துக் கல்லூரி முன்னுள் அதிபர் அ. குமாரசுவாமி ஞாபகார்த்தமாக |
| திரு. க. சிவராமலிங்கபிள்ளை | தன் மாமனுர் புங்குடுதீவு க. செல்லத்துரை ஞாபகார்த்தமாக. |
| | தன் மாமியார் திருமதி திருஞானம் நாகபூரணி ஞாபகார்த்தமாக |
| திரு. இ. மகாதேவா | தன் தந்தையார் அப்பாக்குட்டி இளையப்பா ஞாபகார்த்தமாக |
| | தன் தாயார் விசாலாட்சி இளையப்பா ஞாபகார்த்தமாக. |
| திரு. ச. பொன்னம்பலம் | தன் தந்தையார் பொ. சரவணமுத்து ஞாபகார்த்தமாக |
| திரு. அ. கருணாகரர் | தன் தாயார் மாரிமுத்துப்பிள்ளை அப்பாத்துரை ஞாபகார்த்தமாக |
| திரு. வே. யோசவ் | தன் தாயார் மரியப்பிள்ளை வேளுட் ஞாபகார்த்தமாக. |
| திரு. மு. சிவஞானரத்தினம் | தன் தந்தையார் C. K முருகேசு ஞாபகார்த்தமாக. |
| திரு. சே சிவசுப்பிரமணிய சர்மா | திரு. N. இராசரத்தினம் (முன்னுள் அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை) ஞாபகார்த்தமாக. |
| திரு. வி. சிவசுப்பிரமணியம் | தன் தந்தையார் அருணாசலம் விசயரத்தினம் ஞாபகார்த்தமாக. |
| | தன் தாயார் விசயரத்தினம் அன்னம்மா ஞாபகார்த்தமாக. |

| | |
|---|---|
| திரு. பொ. மகேந்திரன் | தன் தந்தையார் திரு. S. பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக. |
| திரு. கா மாணிக்கவாசகர் | தன் தந்தையார் காசிநாதபிள்ளை ஞாபகார்த்தமாக. |
| திரு. மயில் அமிர்தலிங்கம் | யாழ் இந்துக் கல்லூரி முன்னுள் அதிபர் C. சபாரத்தினம் ஞாபகார்த்தமாக |
| நீராவியடி வண். வட கிழக்கு சனசமூக நிலைய சார்பில் திரு. மயில் அமிர்தலிங்கம் | திரு. இ சிவகுருநாதர் ஞாபகார்த்தமாக, |
| திரு. சி. செ. சோமசுந்தரம் | தன் தந்தையார் சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் ஞாபகார்த்தமாக<br>தன் தாயார் திருவேங்கடவல்லி சிதம்பரநாதச் செட்டியார் ஞாபகார்த்தமாக<br>தன் சகோதரர் சிதம்பரநாதச் செட்டியார் திருச்சிற்றம்பலம் ஞாபகார்த்தமாக. |
| திரு. மா. புவனேந்திரன் | முன்னுள் கோப்பாய் பா, உறுப்பினர் மு. பாலசுந்தரத்தின் மகன், பா. யோகசுந்தரம், சட்டத்தரணி ஞாபகார்த்தமாக. |

உ

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக்கல் லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழிய)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே — பல
கலைமலி கழகமும் இதுவே — தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே !

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவேம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள்கொடு நன்றே

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே !
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே !
ஒளிர்மிகு கழகமும் இதுவே !
உயர்வுறு கழகமும் இதுவே !
உயிரன கழகமும் இதுவே !

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப்பெருங் கலையகம் வாழ்க

வாழ்க ! வாழ்க !! வாழ்க
தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.

சைவப்பிரகாச
அச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்.